**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்கனவே அந்த எண்ணிக்கையைப் பற்றி இந்தச் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு இப்போதுதான், ஒரு வினடிக்கு முன்னல்தான் பதில் சொன்னேன். நாம் எடுக்கவேண்டிய தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் உடனடியாக எடுக்க முடியாது. சீரமைப்புத் திட்டம் அமலாக்கப்பட்ட பிறகு தான் எல்லோருக்கும் வேலை கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இடைக்காலத்தில் தொழிலாளர்களிடத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டு எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கிறோம். எவ்வளவு பேருக்குக் கொடுத்தோம் என்பதைப் பற்றி ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் அறிவித்திருக்கிறார்கள்.

### *Colour sarees*

*495 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Central Government have recently imposed a ban on the production of colour sarees by powerlooms; and

(b) if so, whether this Government has taken any follow up action to implement the ban order strictly in this State and the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) கட்டுப்பாட்டினைக் கொண்டு வருவது பற்றி மத்திய அரசு 1966-ம் ஆண்டு முடிவு எடுத்தது. சமீபத்தில் இது உறுதியாக்கப்பட்டது.

(இ) கட்டுப்பாட்டினை தீவிரமாக அமுலாக்கும் விஷயத்தில் முழு கவனம் செலுத்தும்படி பாவட்ட துணி, நூல் கட்டுப்பாடு அதிகாரிகளுக்கு உத்திரவு அளிக்கப்பட்டது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know the reasons why the Central Government have imposed a ban on the production of colour sarees by the handlooms?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைத்தறிக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலும் விசைத்தறிகளில் குறிப்பிட்ட ரகங்கள்தான் உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்திலும் இந்த விதி பிறப்பிக்கப்பட்டது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** விசைத்தறிகள் அதிகமாக இருப்பது வட நாட்டில், வடநாட்டுக்காரர்களுக்கு கலர் தேவையில்லை. நம் நாட்டில் தயார் செய்யும் கைத்தறி வேஷ்டிகளுக்கு கலர் பார்டர் போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனல் விசைத்தறியில் தயார் செய்யும் வேஷ்டிகளுக்கு கலர் பார்டர் போடக்கூடாது என்று உத்தரவு அளிக்கப்படுமா ?

*1970 மார்ச் 23]*

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *இப்போதுள்ள ஆணையிலேயே வேஷ்டிகளில் கலர் பார்டர் 4¼ இஞ்ச் அகலத்திற்கு மேல் போடக் கூடாது என்று ஆணையில் கூறப்பட்டுள்ளது.*

DR. H. V. HANDE : Sir, is it a fact that the Central Government have passed an order that these sarees must be completely releated to the handloom sactor and whether this Government are in touch with the Central Government? Also whether it is a fact that the Central Government have complained that our State Government have not complied with the order that they have passed. What is the exact position now? Will the Hon. Minister be pleased to give details about it?

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *சேலைகளைப் பொறுத்தவரையில் கலர் சேலைகளில் கரை இரண்டரை இஞ்சுக்கு மேல் பவர் லூமில் போடக் கூடாது என்று ஆணையில் குறிக்கப்பட்டிருக்கிறது. அது அமுலாக்கப்படுகிறதா என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதிகப் பிரச்னை கிடையாது. விசைத்தறிகள் ஏராளமாக உள்ள சில மாநிலங்களில் இந்த ஆணை சரியாக அமுலாக்கப்படாததால் நாமும் பாதிக்கப்படுகிறோம், நம் கைத்தறியும் பாதிக்கப்படுகிறது. நம் நாட்டிலுள்ள மிகக் குறைவான விசைத்தறிகளும் பாதிக்கப் படுகிறது. மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் இந்த ஆணையை அமல் நடத்துவதற்கு சிரத்தை காட்டவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். நம் மீது அவர்கள் பாரத்தைத் தூக்கிப் போட்டு உங்கள் அதிகாரிகளை வைத்து அமுலாக்குங்கள் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அமுலாக்குவதில் தயக்கம் காட்டுவதால் இந்தப் பிரச்னை வளர்ந்து கொண்டே இருக்கிறது.*

### *Industrial Investment Corporation*

* 496 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Industrial Investment Corporation proposes to finance working capital; and

(*b*) if so, the details thereof?

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *(அ) & (இ) வரம்புக்குட்பட்டு ஒரு சில நிறுவனங்களுக்குத் தகுதி அடிப்படையில் மட்டுமே நடைமுறை மூலதனம் கொடுக்கப்படுகிறது.*

***திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :*** *இந்தக் கைத்தறி ஸ்தாபனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய அதிகப்படியான சலுகைகளைச் செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா ?*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *கேள்வி, " தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தொழில் நடைமுறை மூலதனத்துக்கு நிதி உதவி அளிக்கத் திட்டமிட்டுள்ளதா ?" என்பதாகும். கேள்வி 496.*